# அலகுத் தேர்வு -2

## அத்தியாயம் - 1, 2, 3 & 4

## பன்னிரெண்டாம் வகுப்பு ------ வணிகவியல்

காலம் : 1.15 நிமிடம் மதிப்பெண்கள் : 45

பகுதி ---- I

அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். 10 × 1 = 10

1. எந்த நாட்டு நிலக்கரி சுரங்கத்தில் பணியாற்றிய அடிமைகளை சோதனை செய்ததன் மூலம் திரு. F.W.டேலர் அறிவியல் அணுகுமுறையினை கொண்டுவந்தார்?
   அ) ஆப்பிரிக்கா ஆ) தென்அமெரிக்கா இ) கொரியா ஈ) இங்கிலாந்து
2. மேலாண்மை செயல்பாடுகளில் முதன்மையானது எது?
   அ) புதுமைப்படுத்துதல் ஆ) கட்டுப்படுத்துதல் இ) திட்டமிடுதல் ஈ) முடிவெடுத்தல்
3. பின்வருவனவற்றுள் சரிபார்ப்பு செயல்பாடு எது?
   அ) திட்டமிடுதல் ஆ) ஒழுங்கமைத்தல் இ) பணிக்கமர்த்துதல் ஈ) கட்டுப்படுத்துதல்
4. வேறுபட்ட ஒன்று எது?
   அ) திட்டமிடுதல் ஆ) புதுமைப்படுத்துதல் இ) ஒழுங்கமைத்தல் ஈ) இயக்குதல்
5. சரியான கூற்று எது?
   அ) குறியிலக்கு மேலாண்மை இலக்குகளை மட்டுமே அடையச் செய்கிறது.
   ஆ) குறியிலக்கு மேலாண்மை உதவியுடன் செயல்திறன் முறையாக மதிப்பீடு செய்யப்படுகிறது
   இ) குறியிலக்கு மேலாண்மை, குறுகிய கால குறிக்கோள்களையும், நீண்டகால குறிக்கோள்களை கருத்தில் கொள்வதில்லை.
   ஈ) குறியிலக்கு மேலாண்மை, இலக்கு அமைக்கும் செயல்பாட்டில், ஊழியர்களின் பங்களிப்பை அங்கீகரிப்பதில்லை
6. கூற்று ( A ) : ஒவ்வொரு பிரிவின் குறிக்கோள்களும், துறை அல்லது பிரிவுக்கான குறிக்கோள்களும், அமைப்பின் ஒட்டு மொத்த குறிக்கோள்களின் அடிப்படையில் கட்டமைக்கப்படுகிறது.
   காரணம் (R) : ஒரு அமைப்பின் உயர்நிலை ஊழியர்களால், அமைப்பின் குறிக்கோள்கள் கட்டமைக்கப்படுகின்றன.
   அ) A மற்றும் R இரண்டும் சரி ஆனால் R என்பது சரியான விளக்கம் அல்ல.
   ஆ) A மற்றும் R இரண்டும் சரி . மேலும் R என்பது சரியான விளக்கம்
   இ) A சரி ஆனால் R தவறு
   ஈ) A தவறு ஆனால் R சரி
7. மூலதனச் சந்தை என்பது --------- க்கான ஒரு சந்தை ஆகும்
   அ) குறுகியகால நிதி ஆ) நடுத்தரகால நிதி
   இ) நீண்டகால நிதி ஈ) குறுகிய காலநிதி
8. பொருத்துக
   1) ரொக்கச் சந்தை --- a. பணம் முதலீட்டாளர்களிடமிருந்து நேரடியாக நிறுமங்களுக்குச் செல்கிறது
   2) முதல் நிலைச் சந்தை --- b. பங்கு மாற்றகம்
   3) இரண்டாம் நிலைச் சந்தை ---- c. பங்குகள், கடனீட்டுப் பத்திரங்கள்
   4) மூலதனச் சந்தை --- d. தீர்வு உடனடியாக நடைபெறுகிறது

| | 1 | 2 | 3 | 4 |
|---|---|---|---|---|
| அ. | c | d | a | b |
| ஆ. | d | a | b | c |
| இ. | a | b | c | d |
| ஈ. | c | a | d | b |

9. ஓராண்டு அல்லது அதற்கு குறைவாக நிதி கோருதலுக்கான நிதிச்சந்தை ------------- ஆகும்.
அ) பத்திரச் சந்தை ஆ) பணச்சந்தை இ) மூலதனச் சந்தை ஈ) நிதிச் சந்தை

10. தவறான கூற்று எது?
அ) பணிக்கு பொருத்தமான நபர்களை மட்டும் தேர்ந்தெடுப்பது, பணிக்கமர்த்துதல் ஆகும்
ஆ) ஒரு மேலாளர், ஒரு நிறுவனத்தின் பிரதிநிதியாக செயல்பட வேண்டும்
இ) செயலூக்கமளித்தல் மூலமே நிறுவனத்தின் நோக்கங்களை அடைய முடியும்
ஈ) திட்டமிடுதல் இல்லாமல் எந்த ஒரு காரியமும் செய்யமுடியாது

## பகுதி --- II

எவையேனும் 4 வினாக்களுக்கு விடையளிக்கவும். அவற்றில் வினா எண் 16 - க்கு கட்டாயம் விடையளிக்கவும். $4 \times 2 = 8$

11. மேலாண்மை என்றால் என்ன?
12. திட்டமிடுதல் என்றால் என்ன?
13. மேலாண்மையின் துணை செயல்பாடுகளை பட்டியலிடுக
14. குறியிலக்கு மேலாண்மையின் குறிக்கோள்கள் என்ன? ( ஏதேனும் நான்கு )
15. இரண்டாம் நிலைச் சந்தையில் விலை எவ்வாறு நிர்ணயிக்கப்படுகிறது?
16. ஒரு செயலை செயல்படுத்துவதற்கு முன்பு திட்டமிடுதல் அவசியமா? ஏன்?

## பகுதி --- III

எவையேனும் 4 வினாக்களுக்கு விடையளிக்கவும்.அவற்றில் வினா எண் 22 - க்கு கட்டாயம் விடையளிக்கவும். $4 \times 3 = 12$

17. முக்கிய முடிவுப் பகுதிகள் ( Key Result Areas - KRA) என்பது என்ன?
18. உடனடி சந்தை மற்றும் எதிர்நோக்கிய சந்தைகளுக்கும் இடையேயான வேறுபாடுகளை விளக்குக.
19. சந்தைப்படுத்தப்படும் சொத்துக்களுக்கு உதாரணம் தருக.
20. விதிவிலக்கு மேலாண்மையின் குறைபாடுகள் பற்றி விளக்குக.
21. டேலரின் மேலாண்மை தத்துவங்கள் யாவை?
22. முடிவெடுத்தல் முக்கியமென்று நீங்கள் ஏன் நினைக்கிறீர்கள்?

## பகுதி --- IV

அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். $3 \times 5 = 15$

23. மேலாண்மைக்கு பீட்டர் டிரக்கரின் பங்களிப்பு யாது?

( அல்லது )

நவீன மேலாண்மைக் கோட்பாடுகள் விவரி. (ஏதேனும் ஐந்து )

24. மேலாண்மை வீச்செல்லையின் தாக்கங்களை விளக்குக.

( அல்லது )

மேலாண்மையின் முக்கிய பணிகளை கூறி விளக்குக

25. குறியிலக்கு மேலாண்மையின் முக்கிய நன்மைகள் யாவை? (ஏதேனும் பத்து )

( அல்லது )

முதல் நிலைச்சந்தை மற்றும் இரண்டாம் நிலைச்சந்தைக்கும் இடையேயான வேறுபாடுகளை விளக்குக.

Padasalai